**மே – 11**

# TNPSC துளிகள்

- சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமானது, 2026 ஆம் ஆண்டிற்கான GEEF (உலகளாவிய ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் அறக்கட்டளை) உலகளாவிய சுற்றுச்சூழல் மேன்மை விருதுகளில், மெட்ரோ ரயில் பிரிவில் "ஆண்டின் சிறந்த உலகளாவிய சுற்றுச்சூழல் தலைமைத்துவத் திட்டம் 2026" விருதை வென்றுள்ளது.
- நகர்ப்புற வானிலை முன்னறிவிப்பு மற்றும் பருவநிலை ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காக, இந்தியாவின் முதல் நகர்ப்புற வானிலை சோதனைத் தளம் மற்றும் காற்றூர்தித் துகள் ஆய்வகம் சென்னையில் தொடங்கப்பட்டது.
- லெப்டினன்ட் ஜெனரல் என்.எஸ். ராஜா சுப்ரமணி (பணி நிறைவு) இந்தியாவின் அடுத்த பாதுகாப்புப் படைத் தலைவராக (CDS) நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஜெனரல் அனில் சவுகான் பதவிக்காலம் முடிந்த பிறகு, 2026 ஆம் ஆண்டு மே 30 அன்று பொறுப்பேற்பார்.
- தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) வெளியிட்ட 'இந்தியாவில் தற்செயலான மரணங்கள் மற்றும் தற்கொலைகள் (ADSI) 2024' அறிக்கையின்படி, 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் 1,70,746 தற்கொலைகள் பதிவாகியுள்ளன.
- அருணாச்சல பிரதேசத்தில் உள்ள டி'எரிங் நினைவு வனவிலங்கு சரணாலயத்தில் சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு ராயல் பெங்கால் புலி ஒன்று தென்பட்டது.
- கருப்பை புற்றுநோய் மற்றும் ஆரம்பகால நோயறிதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மே 8 அன்று உலக கருப்பை புற்றுநோய் தினம் அனுசரிக்கப் படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "No Woman Left Behind" என்பதாகும்.
- தாய்மார்கள் மற்றும் தாய்வழி உருவங்களின் அன்பு மற்றும் பங்களிப்பைப் போற்றும் வகையில், 2026 ஆம் ஆண்டு அன்னையர் தினம் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமையான மே 10 அன்று அனுசரிக்கப்பட்டது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டின் 15வது முதலமைச்சர்


- தமிழக வெற்றிக் கழகத்தின் (TVK) தலைவர் சி. ஜோசப் விஜய், தமிழ்நாட்டின் 15-வது முதலமைச்சராகப் பதவியேற்றார்.
- பதவியேற்பு விழா சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.
- ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், புதிய முதலமைச்சருக்குப் பதவிப் பிரமாணமும் ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.
- அவருடன் ஒன்பது அமைச்சர்களும் பதவியேற்றனர்.
- அரசியலமைப்பின் சரத்து 164-இன் கீழ் ஆளுநர் முதலமைச்சரை நியமித்தார்.
- 2026 ஆம் ஆண்டு மே 13 அல்லது அதற்கு முன்னதாக சட்டப் பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு கோருமாறு விஜய்க்கு ஆளுநர் உத்தரவிட்டார்.
- கடந்த ஐந்து தசாப்தங்களில், அதிமுக அல்லது திமுக ஆகிய இரு கட்சிகளும் இல்லாத ஒரு அமைச்சரவை தமிழ்நாட்டை ஆட்சி செய்வது இதுவே முதல் முறையாகும்.
- 1950 ஆம் ஆண்டு முதல் விஜய்க்கு முன்னதாக 14 முதலமைச்சர்கள் இருந்துள்ளனர்;

மேலும் 1969ம் ஆண்டில் மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றப்பட்ட பிறகு இவர் 9-வது முதலமைச்சர் ஆவார்.

- வி. ஆர். நெடுஞ்செழியன் என்பவர், சி. என். அண்ணாதுரை (1969) மற்றும் எம். ஜி. இராமச்சந்திரன் (1987) ஆகியோரின் மறைவுக்குப் பிறகு இருமுறை தற்காலிக முதலமைச்சராகப் பணியாற்றினார்.
- இந்திய தேசிய காங்கிரஸைச் சேர்ந்த க. காமராஜர், 1954 முதல் 1963 ஆம் ஆண்டு வரை நீண்ட காலம் முதலமைச்சராகப் பணியாற்றினார்.




## அரசு மருத்துவமனை சிகிச்சை மற்றும் தமிழ்நாடு




- தேசியப் புள்ளியியல் அலுவலகத்தின் (NSO) தரவுகளின்படி, தென்னிந்திய மாநிலங்களில் அரசு மருத்துவமனைகளைத் தேர்ந்தெடுக்கும் நோயாளிகளின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் தான் அதிகம் எனத் தெரியவந்துள்ளது.
- தமிழ்நாட்டில் சுமார் 43% உள்நோயாளிகள் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.
- சுமார் 53.4% நோயாளிகள் தனியார் மருத்துவமனைகளையும், 3.6% பேர் அறக்கட்டளை மருத்துவமனைகளையும் பயன்படுத்தியுள்ளனர்.

- முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் சராசரி சிகிச்சைச் செலவு ₹1,357 ஆகும்.
- இந்தத் தொகை தேசிய சராசரி சிகிச்சைச் செலவான ₹6,631-ஐ விட மிகக் குறைவு.
- தமிழ்நாட்டில் 99% பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடைபெறுவதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

## அரசு மருத்துவமனைகளில் மிகக்குறைந்த மருத்துவச் செலவு – தமிழ்நாடு

States/UTs with the highest average out-of-pocket medical expenditure (OOPME) per hospitalisation case (excluding childbirth) in charitable hospitals over the past 365 days

| STATE | SPENDING (RS) |
|---|---|
| Tamil Nadu | 1,20,994 |
| West Bengal | 83,856 |
| Karnataka | 67,214 |
| Telangana | 46,731 |
| Assam | 45,143 |
| National average: Rs 39,530 | |

- தேசிய மாதிரி கணக்கெடுப்பு (NSS) அறிக்கையின்படி, இந்தியாவின் முக்கிய மாநிலங்களில் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதற்கு மிகக்குறைந்த சொந்தச் செலவில் மேற்கொள்ளும் மருத்துவச் செலவை (OOPME) தமிழ்நாடு பதிவு செய்துள்ளது.
- தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளி சிகிச்சைக்கு ஆகும் சராசரி செலவு ₹1,357 ஆகும்; இது தேசிய சராசரியான ₹6,631-ஐ விட மிகவும் குறைவு.
- இந்த ஆய்வானது கடந்த 365 நாட்களில் மேற்கொள்ளப்பட்ட உள்நோயாளி சிகிச்சைகளுக்கான மருத்துவச் செலவுகளை உள்ளடக்கியது.
- அதேசமயம், தமிழ்நாட்டில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கான செலவு தேசிய சராசரியை விட அதிகமாக உள்ளது.
- தனியார் மருத்துவமனைகளில் சராசரி செலவு ₹74,168 ஆக உள்ளது, தேசிய சராசரி ₹50,508 ஆகும்.

# தேசியச் செய்திகள்

## தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் அமலாக்கம்

- மத்திய அரசு நான்கு புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை இறுதி விதிகளுடன் அதிகாரப் பூர்வ அரசிதழில் வெளியிட்டு முழுமையாக நடைமுறைப்படுத்தியுள்ளது.
- இந்த நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளும் 2025 ஆம் ஆண்டு நவம்பர் 21 முதல் நடைமுறைக்கு வந்தன.
- இந்த புதிய கட்டமைப்பு, 29 பழைய தொழிலாளர் சட்டங்களுக்குப் பதிலாக நான்கு எளிமைப்படுத்தப்பட்ட சட்டத் தொகுப்புகளைக் கொண்டு வந்துள்ளது.
- அந்த நான்கு சட்டத் தொகுப்புகளானது ஊதியச் சட்டத் தொகுப்பு (2019), தொழில்

உறவுகள் சட்டத் தொகுப்பு (2020), சமூகப் பாதுகாப்பு சட்டத் தொகுப்பு (2020) மற்றும் தொழில்சார் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் பணிச்சூழல் சட்டத் தொகுப்பு (2020) ஆகியனவாகும்.


❖ குறைந்தபட்ச ஊதியம், உலகளாவிய சமூகப் பாதுகாப்பு, தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் தொழில் செய்வதை எளிதாக்குதல் ஆகியவற்றை உறுதி செய்வதே இந்த சீர்திருத்தங்களின் நோக்கமாகும்.

❖ ஊதியச் சட்டத் தொகுப்பு என்பது குறைந்தபட்ச ஊதியம், ஊதியத்தை உரிய நேரத்தில் வழங்குதல் மற்றும் தொழிலாளர்களுக்கு சமமான ஊதியம் ஆகியவற்றை வழங்குகிறது.

❖ தொழில் உறவுகள் சட்டத் தொகுப்பு என்பது தொழிற்சங்கங்கள், தொழில் தகராறுகள், ஆட்குறைப்பு மற்றும் நிறுவனங்களை மூடுதல் போன்ற அம்சங்களைக் கையாள்கிறது.

❖ சமூகப் பாதுகாப்பு சட்டத் தொகுப்பு என்பது முறைசார்ந்த மற்றும் முறைசாரா தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி (PF), ஓய்வூதியம், காப்பீடு மற்றும் மகப்பேறு நன்மைகளை வழங்குகிறது.

❖ தொழில்சார் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் பணிச்சூழல் சட்டத் தொகுப்பு என்பது தொழிலாளர் பாதுகாப்பு, சுகாதார வசதிகள், வாரத்திற்கு அதிகபட்சம் 48 வேலை நேரங்கள், கூடுதல் நேர ஊதியம் மற்றும் வார விடுமுறை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்


## தமிழ்நாட்டில் சிற்றாமைகள்/ஆலிவ் ரிட்லி கடல் ஆமை பாதுகாப்பு

❖ 2026 ஆம் ஆண்டு முட்டையிடும் பருவத்தில், தமிழ்நாடு கடற்கரையோரம் சுமார் 1.65 லட்சம் ஆலிவ் ரிட்லி கடல் ஆமைக் குஞ்சுகள் கடலில் விடப்பட்டன.

❖ தமிழ்நாடு வனத்துறையானது 1,985 ஆமை கூடுகளைக் கண்டறிந்து, சுமார் 2.29 லட்சம் முட்டைகளைப் பாதுகாத்தது.


❖ ஆமைகளின் உயிரிழப்பு கடந்த ஆண்டின் 1,572-லிருந்து இந்த ஆண்டு 784-ஆக, அதாவது கிட்டத்தட்ட 50% குறைந்துள்ளது.

- சென்னை வனப்பகுதி 656 கூடுகள் மற்றும் 74,143 சேகரிக்கப்பட்ட முட்டைகளுடன் அதிகபட்ச ஆமை கூடுகளைப் பதிவு செய்துள்ளது.
- கடலில் விடப்பட்ட ஆமைக் குஞ்சுகளின் எண்ணிக்கையில் கடலூர் மாவட்டம் 48,617 குஞ்சுகளுடன் முதலிடம் பெற்றுள்ளது.
- தற்போதைய முட்டையிடும் பருவத்தில் இன்னும் 62,000-க்கும் மேற்பட்ட ஆமைக் குஞ்சுகள் வெளிவர வேண்டியுள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## இந்தியச் சிறைச்சாலை புள்ளி விவரங்கள் 2024 அறிக்கை





- தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB), இந்தியாவில் உள்ள சிறைச்சாலை

நிலவரங்கள் குறித்த 'இந்தியச் சிறைச்சாலை புள்ளிவிவரங்கள் (PSI) 2024' என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- டெல்லி 194.6% என்ற அளவில் நாட்டின் மிக உயர்ந்த சிறைச்சாலை ஆக்கிரமிப்பு விகிதத்தைப் பதிவு செய்துள்ளது; அங்கு 10,026 கைதிகள் தங்கும் வசதி உள்ள நிலையில் 19,512 கைதிகள் உள்ளனர்.
- இந்தியாவில் உள்ள கைதிகளில் பெரும்பகுதியினர் விசாரணைக் கைதிகள் ஆவர்; அதாவது இவர்கள் தங்கள் நீதிமன்ற வழக்குகள் முடிவடைவதற்காகக் காத்திருப்பவர்கள்.
- சிறை ஊழியர்களின் பற்றாக்குறை மற்றும் ஆயிரக்கணக்கான காலிப் பணியிடங்கள் குறித்து இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.
- கைதிகளில் பலர் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்தவர்களாகவும், 10-ஆம் வகுப்புக்கும் குறைவான கல்வித் தகுதி உடையவர்களாகவும் உள்ளனர்.
- சிறைகளுக்குள் கல்வி, கணினி வகுப்புகள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் மறு வாழ்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதையும் இவ்வறிக்கை குறிப்பிட்டு உள்ளது.

# மாநிலச் செய்திகள்

## தெலுங்கானாவில் மனிதக் கடத்தல்




- தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) படி, 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான மனிதக் கடத்தல் வழக்குகள் தெலுங்கானாவில் பதிவாகி உள்ளன.
- 2024 ஆம் ஆண்டில் தெலுங்கானா 423 மனிதக் கடத்தல் வழக்குகளைப் பதிவு செய்துள்ளது; இது இந்தியாவில் பதிவான மொத்த வழக்குகளில் கிட்டத்தட்ட 20% ஆகும்.
- தெலுங்கானாவில் கடத்தல் வழக்குகளின் எண்ணிக்கை 2023-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 25.9% அதிகரித்துள்ளது.
- மாநிலத்தில் அடையாளம் காணப்பட்ட 814 கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களில், 792 பேர் பெண்கள் மற்றும் 49 பேர் 18 வயதுக்குட்பட்ட சிறார்கள் ஆவர்.
- கடத்தல் வழக்குகளுக்குப் பின்னால் உள்ள முக்கிய காரணமாக "பாலியல் சுரண்டல்" இருந்தது; இது மாநிலத்தில் 770 பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்புடையது.

- தெலுங்கானா ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 1.1 வழக்குகள் என்ற அளவில் நாட்டின் மிக உயர்ந்த கடத்தல் குற்ற விகிதத்தைப் பதிவு செய்துள்ளது; இது தேசிய சராசரியான 0.2-ஐ விட அதிகம்.

## ஒடிசாவில் அதிக வன்முறைக் குற்ற விகிதம் பதிவு

- தேசிய குற்ற ஆவணக் காப்பக (NCRB) அறிக்கையின்படி, 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் அதிக வன்முறைக் குற்ற விகிதத்தை ஒடிசா பதிவு செய்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் ஒடிசாவில் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 161.6 வன்முறைக் குற்றப் பாதிக்கப்பட்டவர்கள் பதிவாகியுள்ளனர்.
- இந்த மாநிலம் 75,403 வன்முறைக் குற்ற வழக்குகளைப் பதிவு செய்துள்ளது; இது பீகார், மகாராஷ்டிரா மற்றும் உத்தரப் பிரதேச மாநிலத்திற்கு அடுத்தபடியாக இந்தியாவில் நான்காவது அதிகபட்சமாகும்.
- ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 83 பாதிக்கப்பட்டவர்களுடன் பீகார் மாநிலம் இதில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.
- பெண்களுக்கு எதிரான குற்றங்களில், ஒடிசா ஒரு லட்சம் பெண்களுக்கு சுமார் 118.3 குற்றங்களுடன் இரண்டாம் இடத்திலும், தெலுங்கானா முதலிடத்திலும் உள்ளன.
- ஒடிசாவில் கற்பழிப்பு வழக்குகள் 2024 ஆம் ஆண்டில் 3,054 ஆக இருந்தது 2025 ஆம் ஆண்டில் 2,994 ஆகக் குறைந்துள்ளதாக அறிக்கை தெரிவிக்கிறது.
- 2024 ஆம் ஆண்டில் ஒடிசாவில் 6,000-க்கும் மேற்பட்ட குழந்தைகள் காணாமல் போயுள்ளனர்; இதில் பெண் குழந்தைகள் சுமார் 87% ஆவர்.




## 15 ஆண்டு கால TMC ஆட்சி முடிவு - மேற்கு வங்கம்

- மம்தா பானர்ஜி 2011 முதல் 2026 ஆம் ஆண்டு வரை 15 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, மேற்கு வங்க முதலமைச்சராக தனது பதவிக்காலத்தை நிறைவு செய்தார்.
- அவர் 15, 16 மற்றும் 17-வது விதான் சபா (சட்டமன்ற) காலங்களில் முதலமைச்சராகப் பணியாற்றினார்.
- அவரது பதவிக்காலம் அதிகாரப்பூர்வமாக 2026 ஆம் ஆண்டு மே 7 அன்று முடிவு அடைந்தது.
- 17-வது மேற்கு வங்க சட்டப்பேரவையின் காலம் முடிந்ததையடுத்து, ஆளுநர் ஆர்.என்.

ரவி அதனை கலைத்தார்.

- 2011-ஆம் ஆண்டில் மாநிலத்தில் 34 ஆண்டு கால இடதுசாரி முன்னணி ஆட்சியைத் தோற்கடித்து மம்தா பானர்ஜி ஆட்சிக்கு வந்தார்.
- மேற்கு வங்கத்தின் 18-வது சட்டப்பேரவையின் முதலமைச்சராக சுவேந்து அதிகாரி பதவியேற்றார்.




## முக்கிய தினங்கள்

### எல்லை சாலைகள் அமைப்பின் ஸ்தாபன தினம் 2026 – மே 07

- எல்லை சாலைகள் அமைப்பு (BRO) 1960-ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் நிறுவப்பட்டது.
- இந்தியாவின் எல்லை மற்றும் தொலைதூரப் பகுதிகளில் சாலைகள், சுரங்கப் பாதைகள், பாலங்கள் மற்றும் பிற உள்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கும் பராமரிப்பதற்கும் BRO பொறுப்பாகும்.
- இந்த அமைப்பு பல மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள உயரமான மற்றும் பனி படர்ந்த பகுதிகளில் பணியாற்றுகிறது.
- அருணாச்சல பிரதேசத்தில் உள்ள செலா சுரங்கப்பாதை மற்றும் லடாக்கில் அமைய உள்ள ஷிங்குன் லா சுரங்கப்பாதை ஆகியவை BRO-வின் முக்கிய திட்டங்களாகும்.
- BRO-வின் தாரக மந்திரம் "ஷ்ரமேன சர்வம் சாத்யம்" என்பதாகும்; இதன் பொருள் "கடின உழைப்பின் மூலம் அனைத்தையும் சாதிக்க முடியும்" என்பதாகும்.


67th RAISING DAY
7 MAY, 2026
BUILT IN THE HIGHEST ALTITUDES, CONNECTING INDIA, UNITING HEARTS
WE BUILD
ROADS IN THE TOUGHEST TERRAIN
WE CONNECT
PEOPLE, PLACES AND POSSIBILITIES
WE SERVE
THE NATION IN PEACE AND WAR
WE CARE
FOR THE PEOPLE AND THE ENVIRONMENT
SEVA
SANKALP
SAMARPAN
BRO

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★